**Dina Karan, Coimbatore, Nov 05 2008**

# பள்ளி மாணவர்களுக்கான தொழில் நுட்ப குவிஸ் போட்டி

**கோவை,நவ.5:** கோவை இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியின் சிஐடி ஆடிட்டோரியத்தில் டிசிஎஸ் ஐடி குவிஸ் போட்டி வரும் 14ம் தேதி நடக்கிறது.

பள்ளி மாணவர்களுக்கான இந்தியாவின் மிகப்பெரிய தொழில் நுட்ப குவிஸ் போட்டியாகும். 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகள் இதில் கலந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு பள்ளி சார்பாக இரண்டு பேர் கொண்ட அணியாக எத்தனை அணிகளும் போட்டியில் பங்கேற்கலாம்.

தேசிய அளவில் நடைபெறும் இப்போட்டியில் நாடு முழுவதிலும் 15ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பார்கள்.

2 லட்சம் மாணவர்களை இப்போட்டி சென்றடையும் என எதிர்பார்க்கப்படுவதாக டிசிஎஸ் சென்னை செயல்பாடுகளின் தலைவரும், துணை தலைவருமான ரவி விஸ்வநாதன் தெரிவித்தார். குவிஸ் போட்டிக்கென்று பிரத்யேகமாக www.tcswiz.com இணைய தளத்தை இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராமதுரை துவக்கி வைத்தார்.

பதிவு செய்த முதல் 500 டீம்கள் மட்டுமே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படும்.